FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102161

1. District மாவட்டம் : மயிலாடுதுறை PS: வழுவூர் தடுப்பு மரணங்கள் விசாரணை பிரிவு மயிலாடுதுறை Year: ஆண்டு FIR No.: 02/2026 Date: 04.07.2026
   காவல்நிலையம் முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7, 13(1)(a) of the
   (ii) Act சட்டம்: P.C. Act Sections பிரிவுகள்: Prevention of Corruption
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act - 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 03.07.2026 நாள் வரை
   Time Period : Time from : Time to :
   நேர அளவு நேரம் முதல் 14.10 Hrs நேரம் வரை 23.45 Hrs.

   (b) Information Received at PS. Date : Time :
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.07.2026 நேரம் 08.30 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம் 13.30 Hrs.

4. Type of Information : Written/Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கண்காணிப்பு கட்டுப்பாட்டு அலுவலர்)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 கி.மீ தெற்கு, நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை.

   Beat Number : (b) Address :
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : திருமதி. மாதவராணி Father's/ Husband's Name : தனியரசுமோ
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு 59/2026 நாட்டினம் இந்தியா வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : (g) Address :
   தொழில் வீட்டாட்சியர் முகவரி அலுவலகம், மயிலாடுதுறை, மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், மயிலாடுதுறை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) திரு. ம. சிவராமன், கூட்டுறவு கடன் நிறுவன சங்கச் செயலாளர் (2) திரு. ப. அன்பழகன், சங்கத் துணை உதவியாளர், (3) திருமதி. ந. வனிதா, தலைமை கணக்கு எழுத்தர், (4) திருமதி. க. சசிகலா, SBM கணினி இயக்குபவர், (5) திருமதி. பி. இந்திரா Out Sourcing admin (6) திரு. அ. சிங்காரவேல், நிரந்தர பணி பெற்ற காவலர் (7) திரு. க. பழனிசாமி, நிரந்தர பணி பெற்ற இரவுக் காவலர் (8) திரு. கோ. சிவக்குமார், நிரந்தர பணி பெற்ற காவலர் (9) திரு. ந. அன்பரசன், Temporary Account Assistant (10) திரு. தி. மணிகண்டன், ஒப்பந்த அலுவலக உதவியாளர் (11) திரு. ரமேஷ், பதிவுரு எழுத்தர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம், DVAC-யால் உரிய அனுமதி பெற்று புகார் அளிக்கப்பட்டதால்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்பிக்கப்படுகிறது

இன்று 04.07.2026 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் M.அருள்பிரியா ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திருமதி.M.விஜயராணி, கோட்ட கலால் அலுவலர் (வட்டாட்சியர்), கோட்ட கலால் அலுவலகம், மயிலாடுதுறை, பொறுப்பு மாவட்ட ஆய்வுக்கு அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்படி வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், M.விஜயராணி, கோட்ட கலால் அலுவலர் (வட்டாட்சியர்), கோட்ட கலால் அலுவலகம், மயிலாடுதுறை, பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை. அம்மா, நான், மயிலாடுதுறை மாவட்டத்தில் கோட்ட கலால் அலுவலகத்தில் கோட்ட கலால் அலுவலராக பணிபுரிந்துவருகின்றேன். மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.அ1/9499/2026, நாள் 03.07.2026 இல் கண்ட உத்தரவின்படி, 03.07.2026 ஆம் தேதி 15.00 மணிக்கு நான் மற்றும் திரு.ம.மணிபாரதி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், கோட்ட கலால் அலுவலகம், மயிலாடுதுறை ஆகிய இருவரும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.
(தனி தாளில் இணைப்பு)

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
04.07.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
04.07.2026.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.07.2026.

Name: பெயர் M.அருள்பிரியா,
Rank: நிலை தனிநகல் எண்/No. எண்
இ.த.ம.க. பிரிவு,
மயிலாடுதுறை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்தோம். மயிலாடுதுறை நகராட்சி அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவு, மற்றும் திருத்தம் செய்வதற்கு வருபவர்களிடமும், புதிய கட்டிடம் கட்ட அனுமதி பெற வருபவர்களிடமும், நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்கள் கையூட்டு கேட்டுப் பெறுவதாக மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலினை என்னிடம் தெரிவித்தார். அதன்படி 03.07.2026 தேதி 16.10 மணிமுதல் 23.45 மணிவரை மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர் மற்றும் காவலர்களுடன் சேர்ந்து மயிலாடுதுறை, நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது மயிலாடுதுறை நகராட்சி அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவு, மற்றும் திருத்தம் செய்வதற்கு வருபவர்களிடமும், புதிய கட்டிடம் கட்ட அனுமதி பெற வருபவர்களிடமும், நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்கள் கையூட்டு கேட்டுப்பெற்று வைத்திருந்த கையூட்டு பணம் என்ற அடிப்படையில் 1)திரு.ம.கண்ணன், கூட்டுறவு கடன் சிக்கன சங்க எழுத்தர் என்பவரிடமிருந்து ரு.21,610/-, 2)திரு.ப.அன்பரசன், சத்துணவு உதவியாளர் என்பவரிடமிருந்து ரு.6,650/- 3)திருமதி.த.லதா, துப்புரவு கண்காணிப்பாளர் என்பவரிடமிருந்து ரு.1,440/-, 4)திருமதி.க.சசிகலா, SBM கண்காணிப்பாளர் என்பவரிடமிருந்து ரு.2,120/- 5)திருமதி.ஸ்ரீ.கீர்த்திகா, Outsourcing Admin என்பவரிடமிருந்து ரு.5,000/-, 6)திரு.அ.சிங்கராயர், தூய்மைப்பணி மேற்பார்வையாளர் என்பவரிடமிருந்து ரு.4,700/-7)திரு.த.பழனிசாமி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர் என்பவரிடமிருந்து ரு.1,650/- 8)திருமதி.கோ.அஞ்சலிதேவி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர் என்பவரிடமிருந்து ரு.1,220/- 9)செல்வி.ந.அனுசுயா, Temporary Accounts Assistant என்பவரிடமிருந்து ரு.8,400/-, மற்றும் 10)திரு.சி.மணிகண்டன், ஆதார் சேவை மைய பணியாளர் என்பவரிடமிருந்து ரு.950/- ஆக மொத்தமாக ரு.53,740/- தொகையானது கைப்பற்றப்பட்டது. மேலும், 1)மயிலாடுதுறை நகராட்சி, பொறியியல் பிரிவு வருகை பதிவேடு-2026, 2)மயிலாடுதுறை நகராட்சி, பொது சுகாதார பிரிவு வருகை பதிவேடு-2026, 3)மயிலாடுதுறை நகராட்சி, பொது பிரிவு வருகை பதிவேடு-2026, 4)மயிலாடுதுறை நகராட்சி, நகரமைப்பு பிரிவு வருகை பதிவேடு-2026, 5)நகராட்சி அலுவலக பணியாளர்கள் தொகை குறித்து பதிவு செய்யும் பதிவேடு-2026 6)மயிலாடுதுறை நகராட்சி கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட BRV Abstract, 7)UIDAI Enrolment Client-Status Report ஆகிய ஆவணங்கள் மற்றும் ரு.53,740/- தொகை மயிலாடுதுறை நகராட்சி அலுவலர்கள்

Scanned with OKEN Scanner

கையூட்டாக பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது பணம் கைப்பற்றப்பட்ட 1)திரு.ம.கண்ணன், கூட்டுறவு கடன் சிக்கன சங்க எழுத்தர், 2)திரு.ப.அன்பரசன், சத்துணவு உதவியாளர், 3)திருமதி.த.லதா, துப்புரவு கண்காணிப்பாளர், 4)திருமதி.க.சசிகலா, SBM கண்காணிப்பாளர், 5)திருமதி.ஸ்ரீ.கீர்த்திகா, Outsourcing Admin, 6)திரு.அ.சிங்கராயர், தூய்மைப்பணி மேற்பார்வையாளர், 7)திரு.த.பழனிசாமி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், 8)திருமதி.கோ.அஞ்சலிதேவி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், 9)செல்வி.ந.அனுசுயா, Temporary Accounts Assistant, 10)திரு.சி.மணிகண்டன், ஆதார் சேவை மைய பணியாளர் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி திடீராய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய் 53,740/-, திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் மகஜர் மற்றும் பணம் கைப்பற்றப்பட்ட 10 நபர்களின் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை இந்த புகார் மனுவுடன் தங்கள் வசம் ஒப்படைக்கின்றேன். திடீர் சோதனையின் போது பணம் கைப்பற்றப்பட்ட 1)திரு.ம.கண்ணன், கூட்டுறவு கடன் சிக்கன சங்க எழுத்தர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 2)திரு.ப.அன்பரசன், சத்துணவு உதவியாளர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 3)திருமதி.த.லதா, துப்புரவு கண்காணிப்பாளர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 4)திருமதி.க.சசிகலா, SBM கண்காணிப்பாளர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 5)திருமதி.ஸ்ரீ.கீர்த்திகா, Outsourcing Admin, நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 6)திரு.அ.சிங்கராயர், தூய்மைப்பணி மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 7)திரு.க.பழனிசாமி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 8)திருமதி.கோ.அஞ்சலிதேவி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 9)செல்வி.ந.அனுசுயா, Temporary Accounts Assistant, நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை, 10)திரு.சி.மணிகண்டன், ஆதார் சேவை மைய பணியாளர், நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை மற்றும் 11) மயிலாடுதுறை நகராட்சியில் வரி வசூல் செய்ததில் இருப்பு தொகை குறைவாக வைத்திருந்த திரு.ரமேஷ், பதிவுரு எழுத்தர், காசாளர்(பொ.) நகராட்சி அலுவலகம், மயிலாடுதுறை ஆகியவர்களின் மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) வட்டாட்சியர், கோட்ட கலால் அலுவலர், மயிலாடுதுறை, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), மயிலாடுதுறை. திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர். இன்று 03.07.2026 ஆம் தேதி 16.10 மணியளவில் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை-தரங்கம்பாடி

ரோட்டில் சின்னக்கடை தெருவில், உள்ள நகராட்சி அலுவலகத்தில் 1)திருமதி.மு.விஜயராணி, கோட்ட கலால் அலுவலர் (வட்டாட்சியர்) மயிலாடுதுறை, துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொ), மயிலாடுதுறை மாவட்டம் அவர்கள் தலைமையில் 2)திரு.இரா.அருண்பிரசாத், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர், 3)திருமதி.ம.அருள்பிரியா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை 4)திரு.ம.மணிபாரதி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், கோட்ட கலால் அலுவலகம், மயிலாடுதுறை மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மேற்படி மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை-தரங்கம்பாடி ரோட்டில் சின்னக்கடை தெருவில், அமைந்துள்ள நகராட்சி அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவு, மற்றும் திருத்தம் செய்வதற்கு வருபவர்களிடமும், புதிய கட்டிடம் கட்ட அனுமதி பெற வருபவர்களிடமும், நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், மற்றும் தற்காலிக கணினி பணியாளர்கள் கையூட்டு கேட்டுப் பெறுவதாக மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலினை தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களிடம் தெரிவித்ததின் பேரில், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி இன்று 03.07.2026 தேதி 15.00 மணிக்கு மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்த திருமதி.மு.விஜயராணி, கோட்ட கலால் அலுவலர் (வட்டாட்சியர்) மயிலாடுதுறை, துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொ), மயிலாடுதுறை மாவட்டம் மற்றும் திரு.ம.மணிபாரதி, முதுநிலை வருவாய் ஆய்வாளர், கோட்ட கலால் அலுவலகம், மயிலாடுதுறை ஆகிய இருவருக்கும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலை தெரிவித்து மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து திரு.இரா.அருண்பிரசாத், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர், திருமதி.ம.அருள்பிரியா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மயிலாடுதுறை மற்றும் மயிலாடுதுறை லஞ்ச ஒழிப்பு போலீசார் சகிதம் அரசு வாகனத்தில் மயிலாடுதுறை லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 03.07.2026 ஆம் தேதி சுமார் 15.30 மணிக்கு புறப்பட்டு மயிலாடுதுறை நகராட்சி ஆணையர் அ.வீரமுத்துகுமார் அவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு திடீர் ஆய்வு தொடர்பான விபரம் தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை தரங்கம்பாடி ரோட்டில் சின்னக்கடை தெருவில், உள்ள நகராட்சி அலுவலகமானது சுற்றிலும் காம்பவுண்ட் சுவற்றுடன் கூடிய தெற்கு பார்த்த வாசல் உடைய மெயின் கேட்டிற்கு உள்ளே சுமார் 10 மீட்டர் தூரத்தில் மேற்கு பார்த்த வாசல் உடைய RCC கட்டிடம் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய மயிலாடுதுறை

Scanned with OKEN Scanner

நகராட்சி அலுவலகமானது முதலில் ஒரு ஹாலும், அதற்கு தெற்கே நகராட்சி ஆணையர் அவர்களின் அறையும், ஹாலுக்கு வடக்கே நகரமைப்பு பிரிவு அறையும், ஹாலுக்கு கிழக்கே தடுப்புகளுடன் கூடிய பொதுபிரிவுகள் உள்ள அறையும், அந்த அறைக்கு தெற்கே காசாளர் அறையும், அதற்கு மேற்கே ஒப்வு அறையும், அதற்கு அடுத்ததாக கணக்காளர் அறையும் உள்ளது. பொதுப்பிரிவுகள் உள்ள அறைக்கு வடக்கே மேலாளர் அறையும் உள்ளது. நகராட்சி அலுவலகத்தின் முன்வாயிலுக்கு முன்பு வடக்கே முதல் தளத்திற்கு செல்லும் மாடிப்படியும், முதல் தளத்தில் வடக்கே வருவாய் பிரிவு அறையும், அதற்கடுத்ததாக பொதுசுகாதார பிரிவு அறையும், துப்புறவு ஆய்வாளர் அறையும், கணினி அறையும் பதிவேடுகள் அறையும் அடுத்தடுத்து உள்ளது. மேலும், முதல் தளத்தின் தெற்கே முன்று தனித்தனி அறைகளுடன் கூடிய பொறியியல் பிரிவு உள்ளது. அதற்கு அடுத்ததாக முதல் தளத்திலிருந்து கீழே இறங்குவதற்கு மற்றொரு படிக்கட்டுகள் உள்ளது. மயிலாடுதுறை நகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு மேற்கே பயன்படுத்தப்படாத பழைய நகராட்சி அலுவலக கட்டிடம் உள்ளது. அக்கட்டிடத்தில் மேற்கு பார்த்த அறை ஒன்றில் ஆதார் சேவை மையமும், அதற்கு வலது பக்கம் காம்பவுன்ட் சுவரை ஒட்டி நகர சார் ஆய்வாளர் அலுவலகமும், அதற்கு வடக்கே கூட்டுறவு சிக்கன கடன் சங்க அலுவலகமும் அமைந்துள்ளது. மயிலாடுதுறை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொ.), கோட்டக்கலால் அலுவலர் மற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினர் அலுவலகத்திலிருந்த அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி மயிலாடுதுறை நகராட்சி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது 1)திரு.அ.வீரமுத்துக்குமார், நகராட்சி ஆணையர், மயிலாடுதுறை 2)திரு.கோகுலகிருஷ்ணன், பணிமேற்பார்வையாளர், 3)திரு.ராஜாராமன், பணி ஆய்வாளர், 4)திரு.தேவா, வரைவாளர், 5)திரு.சுரேஷ், இளநிலை உதவியாளர், 6)திரு.ராஜகணபதி, பணிமேற்பார்வையாளர் (பாதாள சாக்கடை), 7)திருமதி.சசிகலா, SBM கண்காணிப்பாளர், 8)திருமதி.ஜெயந்தி, Temporary Data Entry Operator, 9)செல்வி.சோனா, Temporary Data Entry Operator, 10)திருமதி.இலக்கியா, இளநிலை உதவியாளர், 11)திருமதி.அட்சயமாலா, உதவி ஆய்வாளர் LF Audit, 12) திருமதி.லட்சுமி, துணை ஆய்வாளர் LF Audit, 13) திருமதி.விஜி, SBM Animator, 14) செல்வி.ஆர்த்தி, SBM Animator, 14) திருமதி.அஞ்சலிதேவி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், 15)திருமதி.கார்த்திகா, SBM Animator, 16)திருமதி.புனிதவதி, அலுவலக உதவியாளர், 17)செல்வி.அனுசியா, Temporary Accounts Assistant, 18)திருமதி.விஜயா, அலுவலக உதவியாளர், 19) தரு.ராமையன், சுகாதார ஆய்வாளர், 20)திரு.செல்வம், ஈப்பு ஓட்டுநர், 21)திருமதி.சுகுணா, அலுவலக உதவியாளர், 22)திரு.மோகன், ஈப்பு ஓட்டுநர், 23)திரு.வினித்டோனி, இளநிலை உதவியாளர், 24)திரு.அன்பரசன், உதவியாளர், (சத்துணவு) 25)திரு.ரமேஷ், பதிவுரு எழுத்தர், காசாளர்(பொ.), 26)திரு.ராஜகணேஷ், உதவியாளர், 27)திருமதி.ராணி, நகரமைப்பு ஆய்வாளர், 28)திரு.நவீன், Technical Assistant,

29)திரு.முரளிதரன், Assistant Programmer, 30)திரு.பிரபாகரன், தட்டச்சர், 31)ஸ்ரீதர், Working Assistant, 32)திருமதி.ராதிகா, SBM Animator, 33)திருமதி.தமிழ்வாணி, SBM Animator 34)திருமதி.மஞ்சுளா, SBM Animator, 35)திருமதி.லதா, துப்புரவு கண்காணிப்பாளர், 36)திருமதி.செல்வி, Temporary Data Entry Operator 37)திருமதி.கீர்த்திகா, Outsourcing Admin, 38)திரு.கண்ணன், கூட்டுறவு கடன் சிக்கன சங்க எழுத்தர், 39)திரு.சிங்கராயர், தூய்மைப்பணி மேற்பார்வையாளர், 40)திரு.பழனிசாமி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், 41)திரு.மணிகண்டன், இ-சேவை மைய பணியாளர், தனிநபர்கள் 42)பிரசாந்த், த/பெ.குருமூர்த்தி, திருவிழந்தூர், 43)முருகையன், த/பெ.கலியன், ஆனதான்டவபுரம் ரோடு, 44)செல்வமுத்துக்குமார், த/பெ.மகாலிங்கம், மயிலாடுதுறை, 45)பிரபாகரன், த/பெ.வேலாயுதம், கூறைநாடு, 46)வீரமணி, த/பெ.கலியமூர்த்தி, மயிலாடுதுறை 47)கேசவன், த/பெ.வரதராசன், கப்பூர், 48)லெட்சுமி, க/பெ.சரவணன், வேலம்புதுக்குடி, 49)பிரபுராஜன், த/பெ.சிவானந்தம், கோவங்குடி, 50)குணசீலன், மயிலாடுதுறை ஆகியோர் அலுவலகத்தில் இருந்தனர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொ.) மயிலாடுதுறை நகராட்சி அலுவலகத்தில் இருந்தவர்களை விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் அவர்களிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது மயிலாடுதுறை நகராட்சி அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு பதிவு, மற்றும் திருத்தம் செய்வதற்கு வருபவர்களிடமும், புதிய கட்டிடம் கட்ட அனுமதி பெற வருபவர்களிடமும், நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், மற்றும் தற்காலிக பணியாளர்கள் மூலம் சட்ட விரோதமாக, தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி கையூட்டாக பெற்று வைத்திருந்த பணம் என்ற அடிப்படையில் விசாரணை செய்ததில் திடீர் சோதனையின் போது நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், மற்றும் தற்காலிக பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் வைத்திருந்த ரூ.1,53,895/- பணத்தில், சரியான முகாந்திரம் கூறியவர்களிடம் ரூ.1,00,155/- தொகையானது அவரவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், சரியான முகாந்திரம் கூறாததால் ரூ.53,740/- தொகையானது கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

வ. எண்.	பெயர் மற்றும் விபரம்	கைப்பற்றப்பட்ட தொகை (ரூ.)	திரும்ப ஒப்படைக்கப்பட்ட தொகை (ரூ.)
1	திரு.கண்ணன், கூட்டுறவு கடன் சிக்கன சங்க எழுத்தர்,	21610	-
2	திரு.அன்பரசன், உதவியாளர், (சத்துணவு)	6650	-

3	திருமதி.லதா, துப்புரவு கண்காணிப்பாளர்,	1440	-
4	திருமதி.சசிகலா, SBM கண்காணிப்பாளர்,	2120	-
5	திருமதி.கீர்த்திகா, Outsourcing Admin,	5000	-
6	திரு.சிங்கராயர், தூய்மைப்பணி மேற்பார்வையாளர்,	4700	-
7	திரு.பழனிசாமி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர்,	1650	-
8	திருமதி.அஞ்சலிதேவி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர்,	1220	-
9	செல்வி.அனுசியா, Temporary Accounts Assistant,	8400	-
10	திரு.மணிகண்டன், இ-சேவை மைய பணியாளர்,	5675	4725
11	திரு.அ.வீரமுத்துக்குமார், நகராட்சி ஆணையர்,	500	500
12	திரு.ராஜாராமன், பணி ஆய்வாளர்,	200	200
13	திருமதி.அட்சயமாலா, உதவி ஆய்வாளர் LF Audit,	950	950
14	திருமதி.லட்சுமி, துணை ஆய்வாளர் LF Audit,	450	450
15	திரு.ராஜகணபதி, பணிமேற்பார்வையாளர் (பாதாள சாக்கடை)	100	100
16	திரு.செல்வம், ஈப்பு ஓட்டுநர்,	110	110
17	திருமதி.சுகுணா, அலுவலக உதவியாளர்,	190	190

18	திரு.மோகன், டீப்பு ஒட்டுநர்,	300	300
19	திரு.ரமேஷ், பதிவுரு எழுத்தர், காசாளர்(பொ.),	200	200
20	திரு.ராஜகணேஷ், உதவியாளர்,	970	970
21	திருமதி.ராணி, நகரமைப்பு ஆய்வாளர்,	210	210
22	திரு.முரளிதரன், Assistant Programmer,	450	450
23	திரு.பிரபாகரன், தட்டச்சர்,	130	130
24	ஸ்ரீதர், Working Assistant,	530	530
25	வீரமணி.த/பெ.கலியமூர்த்தி. மயிலாடுதுறை	1100	1100
26	பிரசாந்த், த/பெ.குருமூர்த்தி, திருவிழந்தூர்.	3300	3300
27	குணசீலன். மயிலாடுதுறை	15500	15500
28	பிரபுராஜன்.த/பெ.சிவானந்தம், கோவங்குடி,	2870	2870
29	லெட்சுமி, க/பெ.சரவணன், வேலம்புதுக்குடி	7400	7400
30	கேசவன், த/பெ.வரதராசன், கப்பூர்,	6390	6390
31	பிரபாகரன்,த/பெ.வேலாயுதம், கூறைநாடு,	51000	51000
32	செல்வமுத்துக்குமார், த/பெ.மகாலிங்கம், மயிலாடுதுறை,	1080	1080
33	முருகையன், த/பெ.கலியன், ஆனதான்டவபுரம் ரோடு	1500	1500
	கூடுதல்	153895	100155

மேற்படி திடீர் ஆய்வின்போது 1. திரு.கண்ணன், கூட்டுறவு கடன் சிக்கன சங்க எழுத்தர், என்பவரை விசாரிக்க அவர் தனது வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர்

செய்த ரூ.21,610/- (500X43=21,500, 100X1=100, 10X1=10), தொகை மற்றும் 2.திரு.அன்பரசன், சத்துணவு உதவியாளர் என்பவரை விசாரிக்க அவர் தனது பேண்ட் பின்பாக்கெட்டில் வைத்திருந்த பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ. 6,650/- (500X13=6500/-, 100X01=100, 20X2=40, 10X1=10) தொகை மற்றும் 3. திருமதி.லதா, துப்புரவு கண்காணிப்பாளர் என்பவரை விசாரிக்க அவர் தனது கையில் வைத்திருந்த பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.1,440/- (500X2=1000/-, 200X2=400/-, 20X2=40/-,) தொகை மற்றும் 4. திருமதி.சசிகலா, SBM கண்காணிப்பாளர் என்பவரை விசாரிக்க அவர் தனது பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.2,120/- (500X4=2000/-, 100X1=100/-, 20X1=20/-,) தொகை மற்றும் 5. திருமதி.கீர்த்திகா, Outsourcing Admin என்பவரை விசாரிக்க அவர் தனது ஹேண்ட் பேக்கிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.5,000/- (500X10=5000/-) தொகை மற்றும் 6. திரு.சிங்காரபர், தூய்மைப்பணி மேற்பார்வையாளர், என்பவரை விசாரிக்க அவர் தனது சட்டை பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.4,700/- (500X9=4500/-, 200X1=200/-), தொகை மற்றும் 7. திரு.பழனிசாமி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், என்பவரை விசாரிக்க அவர் தனது சட்டை பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.1,650/- (500X2=1000/-, 200X1=200/-,100X4=400/-,20X2=40/-10X1=10/-),தொகை மற்றும் 8.திருமதி.அஞ்சலிதேவி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், என்பவரை விசாரிக்க அவர் தனது பர்சிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.1,220/- (500X2=1000/-, 100X2=200/-, 10X2=20/-,) தொகை மற்றும் 9.செல்வி.அனுசியா, Temporary Accounts Assistant, என்பவரை விசாரிக்க அவர் தனது ஹேண்ட் பேக்கிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.8,400/- (500X16=8000/-,100X4=400/-) தொகை 10. திரு.மணிகண்டன், இ-சேவை மைய பணியாளர் என்பவரை விசாரிக்க அவர் இன்றைய தினம் கணினியில் ஆதார் விண்ணப்ப கட்டணமாக வசூல் செய்த தொகை ரூ.4,725/- தவிர்த்து அவர் பொதுமக்களிடம் கூடுதலாக வசூல் செய்து வைத்திருந்த கையூட்டு பணம் ரூ.950/- (500X1=500/-,100X4=400/-,50X1=50/-),தொகை (மீதமுள்ள ரூ.4,725/- அவரிடமே மீள ஒப்படைக்கப்பட்டது) ஆக மொத்தம் ரூ.53,740/- கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.ரமேஷ், பதிவுரு எழுத்தர், காசாளர்(பொ.). என்பவரை விசாரிக்க அவர் இன்றைய தினம் வரி வசூல் செய்த விபரத்தினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து எடுத்து கொடுத்தார். அதில் பணமாக ரூ.3,32,603/- வசூல் செய்யப்பட்டதாகவும், மற்றும் காசோலையாக ரூ.61,953/- வசூல் செய்யப்பட்டதாகவும் பதிவுகள் இருந்த நிலையில் அவர் பணமாக வசூல் செய்திருந்த தொகையை கணக்கிட்டதில், ரூ.1,82,080/- மட்டுமே இருப்பு இருந்தது. மீதமுள்ள தொகைக்கு முறையான விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை. இது குறித்து நகராட்சி ஆணையரிடம் விளக்கம் கேட்க, நகராட்சி அலுவலக மேலாளர் (பொ.) திருமதி.லதா, வருவாய் அலுவலர் என்பவரால் தினசரி சிட்டாவுடன் ஒப்பிட்டு கணக்குகளை சரிபார்த்து மறுநாள் வங்கியில் செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. மேலும், தற்போது கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ள கணக்குகளின்படி ரூ.1,50,523/- மீத தொகைக்கான பணம் கையிருப்பில்

இல்லை என்பது தவறுதான் என்று தெரிவித்தார். மேலும், நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் திரு.சுரேஷ், இளநிலை உதவியாளர், என்பவர் எடுத்து ஆஜர் செய்த 1.மயிலாடுதுறை நகராட்சி, பொறியியல் பிரிவு வருகை பதிவேடு-2026, 2. மயிலாடுதுறை நகராட்சி, பொது சுகாதார பிரிவு வருகை பதிவேடு-2026, 3. மயிலாடுதுறை நகராட்சி, பொது பிரிவு வருகை பதிவேடு-2026, 4.மயிலாடுதுறை நகராட்சி, நகரமைப்பு பிரிவு வருகை பதிவேடு-2026. நகராட்சி அலுவலக பணியாளர்கள் தொகை குறித்து பதிவு செய்யும் பதிவேடு-2026 (03.07.2026 கு.மணிகண்டபிரபு வருவாய் உதவியாளர் - ரு.540/- பணம் கொண்டு வந்ததாக பதிவு செய்துள்ளார்) மயிலாடுதுறை நகராட்சி கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட BRV Abstract, UIDAI Enrolment Client-Status Report ஆகிய ஆவணங்கள் மற்றும் ரு.53,740/- தொகை ஆகியவை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் ஆய்வில், தொகை கைப்பற்ற 1 முதல் 10 வரை உள்ளவர்களுக்கு தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் ஆய்வானது இன்று 03.07.2026-ஆம் தேதி 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. **மாண்பமை அம்மா**, இந்த புகார் மனுவை திருமதி.M.விஜயராணி, கோட்ட கலால் அலுவலர் (வட்டாட்சியர்), கோட்ட கலால் அலுவலகம், மயிலாடுதுறை, பொறுப்பு மாவட்ட ஆய்வுக்கு அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம் என்பவரிடமிருந்து 04.07.2026 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு பெற்று, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனரகத்திலிருந்து உரிய அனுமதி பெற்றும், சட்ட ஆலோசனை பெற்றும் மயிலாடுதுறை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணப்பு பிரிவு குற்ற எண். 02/2026, சட்ட பிரிவு 7, 13 (1) (a) of The Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act in 2018 இன் படி இன்று 04.07.2026 ஆம் தேதி மதியம் 13.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்டது.

(மா. அருள்பிரியர்)
காவல் ஆய்வாளர். 04/07/2026.
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மயிலாடுதுறை.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் அசல், எதிரிகள் 1)திரு.ம.கண்ணன், கூட்டுறவு கடன் சிக்கன சங்க எழுத்தர், 2)திரு.ப.அன்பரசன், சத்துணவு உதவியாளர், 3)திருமதி.த.லதா, துப்புரவு கண்காணிப்பாளர், 4)திருமதி.க.சசிகலா, SBM கண்காணிப்பாளர், 5)திருமதி.ஸ்ரீ.கீர்த்திகா, Outsourcing Admin, 6)திரு.அ.சிங்கராயர், தூய்மைப்பணி மேற்பார்வையாளர், 7)திரு.க.பழனிசாமி, தூய்மைப்பணி மேற்பார்வையாளர், 8)திருமதி.கோ.அஞ்சலிதேவி, தூய்மைப்பணி

மேற்பார்வையாளர், 9)செல்வி.ந.அனுசுயா, Temporary Accounts Assistant, 10)திரு.சி.மணிகண்டன், ஆதார் சேவை மைய பணியாளர் ஆகியவர்களின் வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை மாண்புமிகு மாவட்ட/அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, மாவட்ட அமர்வு நீதிமன்றம்/ சிறப்பு நீதிமன்றம், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(ம. அருள்பிரியா)
காவல் ஆய்வாளர், 01/07/2026.
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மயிலாடுதுறை.